Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

| | |
|---|---|
| Calendar Miscellaneous<br>Preliminary Registered<br>Sessions | Case No. **S.C. No.1 of 2025** |
| Deposition of Witness for | : **PW8(LW12)** |
| Name | : திரு.ஹரிஷ்குமார் |
| Father's Name | : காட்டுராஜா |
| Village | : கள்ளிபுரம் |
| Taluk | : பென்னாகரம் |
| Calling | : Collection Worker |
| Age | : 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.10.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பென்னாகரத்தில் உள்ள வினோ டிஜிட்டல் பேனர் கடையில் எதிரி வேலை செய்து கொண்டிருந்தார். அக்கடையின் ஓனர் வினோத்குமார் என்னுடைய நெருங்கிய நண்பர். அந்த வகையில் பேனர் கடைக்கு நான் அடிக்கடி செல்வேன். அந்த வகையில் ஆஜர் எதிரி எனக்கு அறிமுகமாகி நண்பரானார். 01.11.2024ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் வினோ டிஜிட்டல் பேனர் கடைக்கு சென்றேன். அப்போது கடையின் ஓனர்

வினோத்குமார் அங்கு இல்லை, சத்தியமூர்த்தி இருந்தார். சத்தியமூர்த்தி என்னிடம் பிக்கனஅள்ளியில் திருவிழா நடைபெறுவதாகவும் இரு சக்கர வாகனம் ஏதாவது இருந்தால் கொடு என்று கேட்டார். அதற்கு நான் என்னிடம் வண்டி இல்லை என்று கூறினேன். மாதையனிடம் மணி என்பவர் அடமானம் வைத்த இரு சக்கர வாகனத்தை கார்முகில் என்பவரிடம் இருப்பதாகவும் அதை வாங்கி செல் என்று நான் கூறினேன். பின்னிட்டு நான் கார்முகிலிடம் இரு சக்கர வாகனத்தை வாங்கி கொண்டு பேனர் கடைக்கு சென்றேன். இரு சக்கர வாகனத்தை சத்தியமூர்த்தியிடம் கொடுத்தேன். அதற்கு ஆஜர் எதிரி நீயும் என்னுடன் வா போய்ட்டு வரலாம் என்று கூறினார். நானும் ஆஜர் எதிரியுடன் பிக்கன அள்ளிக்கு சுமார் 8 மணிக்கு சென்றோம். பிக்கனஅள்ளிக்கு முன்பாக மலைக்கு செல்லும் பிரிவு ரோட்டில் என்னை அங்கு நிற்க வைத்துவிட்டு இரு சக்கர வாகனத்தை என்னிடம் விட்டுவிட்டு சென்றார். பின்னிட்டு ஒரு கால் மணி நேரம் கழித்து ஆஜர் எதிரி பதட்டமாக வந்தார். சண்டை ஏற்பட்டுவிட்டது வண்டியை சீக்கிரம் எடு என்று கூறினார். நான் வண்டியை எடுத்து கொண்டு பின்னால் எதிரி அமர்ந்து கொண்டு பாப்பாரப்பட்டி சுப்ரமணிய சிவா சமாதி அருகே சென்றபோது வண்டியை நிறுத்த சொன்னார். அப்போது ஆஜர் எதிரி அசோக்குமாருடன் சண்டை ஏற்பட்டு நான் கத்தியால் அவரை குத்திவிட்டேன் என்று கூறினார். அதற்கு நான் அவரை திட்டிவிட்டு வண்டியை விட்டு இறங்கிவிட்டேன். பின்னிட்டு நான் போக்குவண்டியை பிடித்து பென்னாகரம் சென்றேன். அப்போது அசோக்குமாரின் சித்தி மகன் விஜய்க்கு நடந்த

விவரத்தை தகவல் சொன்னேன். 16.11.2024ம் தேதி அன்று பாலக்கோடு குற்றவியல் நீதிமன்றத்தில் சென்று நடந்த விவரங்களை வாக்குமூலமாக கொடுத்தேன். அதில் கையொப்பம் இட்டேன். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.7** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை 04.11.2024 அன்று விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

விஜய் என்பவரின் தொலைபேசி எண் தற்போது ஞாபகமில்லை. ஆனால் போலீசார் விசாரணையின்போது சொல்லி உள்ளேன், அவர்கள் எழுதவில்லை. நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்திலும் தொலைபேசி எண் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. போலீசார் விசாரணையின்போது எதிரி என்னை திருவிழாவிற்கு அழைத்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி பதட்டமாக வந்தார் என்றும் சண்டை ஏற்பட்டதாக சொன்னார் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் தவறு. நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரங்களை போலீசார் விசாரணையின்போது சொல்லி உள்ளேன் என்றால் பேன்ட் மற்றும் சட்டையில் இரத்த கரை இருந்ததாகத்தான் சொல்லி உள்ளேனா என்றால் பேன்ட்–ல் மட்டும் இரத்த கரை இருந்ததாக சொன்னேன். நான் சொல்லாத விவரத்தை அவர்கள் எழுதி கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. 04.11.2024ம் தேதி விஜயுடன் என்னையும் சேர்த்து போலீசார் விசாரித்தார்களா என்றால் என்னை மட்டும் விசாரித்தார்கள். நான் சொன்ன நேரத்தில் எதிரி என்னுடன் இரு சக்கர வாகனத்தில் வரவில்லை என்றும் எதிரி என்னிடம் கொலை செய்ததாக

சொல்லவில்லை என்றும் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 16.10.2025.

THIRUMAGAL C
Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.10.16 17:19:54 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.